## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (ஆகஸ்ட் 2014)

### EDU/S 3201 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தற்கால ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய நிலைமாற்றுத் தன்மை (Transformation role) வகிபாகத்தின் ஐந்து பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆசிரியர் கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதின் முக்கியமான நன்மைகளை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(இ) வகுப்பறை தொடர்பாடல் செயற்முறையைச் சிறப்பாக முன்னெடுக்க கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

02.(அ) "ஒரு நாட்டின் தேசிய இலக்கு, வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் குறிக்கோளுடனான பரந்த எண்ணக்கருவாகும்." இக்கூற்றினை விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறைச் செயற்பாட்டில் விஷேட அம்சங்களை முன்வைக்க.

(10 புள்ளிகள்)

03.(அ) பாடத்திட்டமொன்றிலிருந்து வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதன் முக்கிய நோக்கங்களை எடுத்துக்கூறி, வேலைத்திட்டமொன்றிலிருந்து பாடக்குறிப்பைத் தயாரிக்கையில் 5E முறையின் முக்கியத்துவத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "கற்றல் - கற்பித்தல் நிகழ்ச்சியானது ஒரு "மூலவழித்தொடர்பாடல்" ஆகும் (Three way communication)." இக்கூற்றுக்கு சாதகமான காரணிகளை முன்வைத்து விளக்குக.

04. (அ) பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட கற்றலானது சிறந்த பெறுமானமுடைய கற்பித்தல் முறையாகும். மாணவர்கள் இப்பிரச்சினையை உணர்ந்து தீர்வு காண முடியுமாயின் எவ்வாறான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(15 புள்ளிகள்)

(ஆ) ஒரு பிரச்சினையை ஓர் ஒழுங்குமுறையில் அணுகுவதற்கு விதிவரமுறை (Inductive Method) விதிவிலக்கு முறை (Deductive method) ஆகியன உதவியாக அமைகின்றன. வகுப்பறையில் தோன்றும் பிரச்சினைகளை அணுகுவதற்கு இம்முறைகள் எவ்வளவு முக்கியத்துவமுடையன என்பதை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

05.(அ) வகுப்பறைச் செயற்பாட்டின் வினைத்திறனைத் தீர்மானிக்கவல்ல, ஒப்படையொன்றில் அடங்கியருக்க வேண்டிய பிரதான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) வினைத்திறனான கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது ஆசிரியரினால் கேட்கப்படும் வினாக்களின் தனிமையிலும், அவ்வினாக்கள் எவ்வளவு கவனமாக உருவாக்கப்பட்டுள்ளன என்பதிலும் தங்கியுள்ளது. இதன்படி வினா கேட்கும் ஆசிரியரிடம் இருக்க வேண்டிய இயல்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

06.(அ) பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்படி முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) பலவகுப்புக்கற்பித்தல் முறையை வெற்றிகரமாகச் செய்வதற்கு உதவும் காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) குழுமுறைக்கற்பித்தல் செயற்பட்டினை வகுப்பறையொன்றில் செயற்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்வைக்க.

(05 புள்ளிகள்)